Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 4

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 28 ஆம் நாள் துல்கஃதா 26 (10-4-64) வெள்ளிக்கிழமை இதழ் 60

# குதிரைப்பந்தயம் தடைசெய்யப்படும்

## முன்னைய தீர்மானத்தில் மாறுதலில்லை

### இன்னும் 4 மாதங்களே நடைபெற அனுமதிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

**குதிரைப் பந்தையத்தைத் தடைசெய்வதென்ற அரசாங்கத்தின் முன்னைய முடிவில் எவ்வித மாறுதலும் செய்யப்படமாட்டாது எனத் தெரியவருகிறது. இன்னும் சுமார் நான்குமாத காலத்துக்கே குதிரைப் பந்தயம் நடைபெற அனுமதிக்கப்படும். அதன்பின்னர் குதிரைப்பந்தயத்தை முற்றாகத் தடைசெய்வதென மந்திரிசபை தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.**

குதிரைப்பந்தயத்தைத் தடை செய்வதென அரசாங்கம் ஏற்கனவே முடிவுசெய்திருந்தது. அந்த முடிபுக்கிணங்க குதிரைப் பந்தயத்தை ஆகஸ்ட் 26-ந் திகதிக்குப் பின்னர் நடத்த அனுமதிப்பதில்லையென மந்திரிசபை தீர்மானித்துள்ளது. குதிரைப்பந்தயத்தை முற்றாகத் தடைசெய்வதென்ற முன்னைய முடிவை அமுல்நடத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## 'ரகசியங்களை பிரிட்டன் சீனுவுக்குக் கொடுத்தது'

### சாவதற்கு முன் ஜெனரல் மக்கார்தர் கொடுத்த தகவல்

வாஷிங்டன், ஏப்ரல் 9

**கொரியா யுத்தத்தின்போது சில இரகசியத் தகவல்களை சீனுவுக்கு பிரிட்டன் கொடுத்ததாக காலஞ்சென்ற அமெரிக்க முன்னாள் தளபதி ஜெனரல் மக்கார்தர் உயிருடனிருக்கும்போது தெரிவித்த விஷயம் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.**

காலஞ்சென்ற அமெரிக்க முன்னாள் தளபதி ஜெனரல் டக்ளஸ் மக்கார்த்தர் 1954-ம் ஆண்டில் அளித்த ஒருபேட்டியின் விபரம் நேற்று வெளியாகியுள்ளது.

கொரியா யுத்தத்தின்போது சில இரகசியத் தகவல்களை சீனுவுக்கு பிரிட்டன் வெளியிட்டதாக இப்பேட்டியில் ஜெனரல் மக்கார்தர் தெரிவித்துள்ளார்.

இந்தப்பேட்டியின் விபரம் தாம் இறந்தபின்னர்தான் வெளியிடப்படவேண்டுமென்று ஜெனரல் மக்கார்தர் கேட்டிருந்தார். இதற்கிணங்க இப்பேட்டியின் விபரம் நேற்று வெளியிடப்பட்டது.

ஜெனரல் மக்கார்தர் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகளை வாஷிங்டனிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் மறுத்துள்ளது.

கொரியா யுத்தத்தின்போது ஜெனரல் மக்கார்தர் எடுத்த நடவடிக்கை காரணமாக அப்போது அமெரிக்க ஜனதிபதியாகவிருந்த ட்ரூமன் அவரை திடீரெனப் பதவிநீக்கம் செய்தார்.

## சுகர்னோவின் எச்சரிக்கை

ஜாகர்த்தா, ஏப்ரல். 9

மலேசியாவை ஒழித்துக் கட்டுவதெனத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் இதற்காக 2 கோடியே 10 லட்சம் மக்கள் திரண்டுள்ளனர் என்றும் இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னோ அறிவித்துள்ளார்.

## கதிர்காமம் புனித நகரத்திட்டம்

கொழும்பு, வியாழன்

கதிர்காமம் புதிய நகர் திட்டம் சம்பந்தமான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புனித நகர் திட்ட வேலைகள் இவ்வருடம் அக்டோபர் மாதத்துக்குள் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கதிர்காமம் புனித நகர் திட்டத்தின்கீழ் அங்கு அறுபது கடைகள் நிறுவப்படவிருக்கின்றன. கட்டிட அமைப்பு தேசிய வேலைகள் விடமைப்புப்பகுதியின் கீழ் அடுத்தமாதம் ஆரம்பமாகும்.

மூன்று லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டு வரும் அரசாங்க யாத்திரிகர் மடம் தற்பொழுது பூர்த்தியாகும் நிலையில் இருக்கின்றது. இதனைத் தொடர்ந்து பல மடங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

## பூட்டான் பிரதமர் கொலை சம்பந்தமாக ஒருவர் கைது

காங்டோக், ஏப். 9

பூட்டான் பிரதமர் ஜிட்னி டோர்ஜி கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் ஒரு பூட்டான் பிரஜை என்றும் இவரது பெயர் தாஞ்சே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயில் ஐயர் கொலை வழக்கு

## ரூ. 10,000 பிணையில் செல்ல இரு எதிரிகளுக்கு அனுமதி

### விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

உருத்திரபுரம் பிள்ளையார் கோவில் ஐயர் கொலை வழக்கில் முதலாம் எதிரியான முத்தர் வேலுப்பிள்ளையையும் இரண்டாம் எதிரியான சின்னத்தம்பி பசுபதியையும், நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. தலா 10,000 ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தார்.

உருத்திரபுரம் கோயில் ஐயர் கொலை வழக்கில் 1-ம் எதிரியான முத்தர் வேலுப்பிள்ளை, 2-ம் எதிரியான சின்னத்தம்பி பசுபதி, 3-ம் எதிரியும் காலஞ் சென்ற காசிலிங்க சர்மாவின் மனைவியுமான கோகிலம்பாள் ஆகியோர் நேற்றுக் காலை வடபகுதி ஆசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணை செய்யஇருவாரங்கள்பிடிக்குமாதலால் இவ்வழக்கு விசாரணையை அடுத்தபருவகால அசைஸ் விசாரணைக்கு ஒத்திவைப்பதாக நீதியரசர் தெரிவித்ததை தொடர்ந்து 1-ம் எதிரியின் வழக்கறிஞர் திரு. அமிர்தலிங்கமும், 2-ம் எதிரியின் வழக்கறிஞர் திரு. ரீ. கணேசலிங்கமும், முதலாம், இரண்டாம் எதிரிகளை பிணையில் விடுதலை செய்ய தனித்தனியாக விண்ணபித்துள்ளதாக தெரிவித்தார்கள். கடந்த பருவகால விசாரணையின் போது 2-ம் எதிரியை பிணையில் விட விண்ணப்பித்ததையும், 2-ம் எதிரியின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டினர். இவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதியரசர் முதலிரு எதிரிகளையும் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மூன்றும் எதிரியாகிய காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் மனைவியாகிய கோகிலாம்பாளை பிணை எடுப்பதற்கு எவரும் முன்வரவில்லையென்றும் அவர் இந்தியாவை சேர்ந்தவரென்றும், அவரின் சொந்தக்காரர்கள் இலங்கையிலில்லையென்றும் ஆதலால் அவரை பிணையில் விடுதலை செய்ய விண்ணப்பிக்கவில்லையென்றும், 3-வது எதிரியாகிய கோகிலாம்பாள் சார்பில் ஆஜராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு. ரி. எஸ். ஆனந்த குமாரசாமி தெரிவித்தார்.

அடுத்த பருவகால விசாரணையின் ஆரம்பத்திலேயே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்என்றும் அதுவரை, 3-ம் எதிரியைவிளக்கமறியலில் இருக்கும்படியும் நீதியரசர் தெரிவித்தார்.

பிணையில் விடுதலை செய்யப்படும் எதிரிகள்மீதுள்ள நிபந்தனை பற்றி நீதியரசர் கூறியதாவது:- 1-ம் எதிரியாகிய முத்தர் வேலுப்பிள்ளை, ஒவ்வொரு திங்கட்கிழமையும் கன்

(5-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர் பிரச்னை:

## "நேருவை சந்தித்த பின்னரே நான் யோசனை கூறுவேன்"

### ஷேக் அப்துல்லா பேட்டி

ஜம்மு, ஏப்ரல் 9

காஷ்மீர் பிரச்னை குறித்து தற்பொழுது திட்டவட்டமாக எதுவும் சொல்லமுடியாதென்றும் பிரதமர் நேருவைச் சந்தித்தபின்னர்தான் இப்பிரச்னை சம்பந்தமாக எந்தவித யோசனையும் சொல்லமுடியுமென்றும் திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

திரு. ஷேக் முகம்மது அப்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நமது அரசியல், பொருளாதார, சமூகத் திட்டங்களில் பெரும்பாலும், நமது சுயநலத்தை எதிர்த்தே செய்யப்படுகின்றன. சுயநலமென்பது சமூகத்துக்கே ஒரு சாபத்தீடு. நம்மைவிட பிறர் நன்மையை நாம் கருதுவதாயின் எவ்வளவு மேலாக இருக்கும்.

—டாக்டர் பால்காம்பெல்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருதுஆண்டு பங்குனி ௴ 28 ௳ (10-4-64)

## யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் வரி

யாழ்ப்பாணத்திலே குழாய்க் குடிதண்ணீர்த் திட்டத்துக்காக அரசாங்கம் 35 லட்ச ரூபாய் கடன்உதவி அளித்துள்ளது. இந்தக்கடனை 40 வருடங்களில் யாழ்ப்பாண மாநகரசபை, தலைமை அரசாங்கத்துக்குப் பல தவணைகளாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பது ஒப்பந்தம். இதன்படி இவ்வருடம் முதல் தவணையை செலுத்த வேண்டி இருக்கும்.

இதுசம்பந்தமாக புதிய குடிதண்ணீர் வரி இங்கு அறவிடப்படுகின்றது. சோலைவரியை 100-க்கு 2 விகிதம் அதிகரித்தே அப்புதிய வரியை வசூலிக்கின்றார்கள். குழாய்த்தண்ணீர்வசதி கிடைத்துள்ள பகுதியிலுள்ள எல்லா வீட்டுக்காரர்களிடமும் இந்தப் புதிய வரி வாங்கப்படுகின்றது. செல்வந்தர்களுக்கு இப்புதிய வரியைச் செலுத்துவது கஷ்டமல்ல. ஆனால் ஏற்கெனவேயுள்ள சோலைவரியைச் செலுத்த முடியாமல் கஷ்டப்படும் ஏழைகளுக்கும் நடுத்தர குடும்பத்தினருக்கும் இப்புதிய வரி அதிக சுமையாகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

என்றாலும் இப்போது வசூலிக்கப்படும் 2 சத கூடுதல்வரி போதுமானதாகாதென்றும், தவணையை மத்திய அரசாங்கத்துக்குச் செலுத்த மாநகர சபையின் பொதுவருமானத்திலிருந்தே கொடுக்க வேண்டியிருக்குமென்றும் இது காரணமாக நிர்வாகம் சீர்கெடலாமென்றும் உள்ளூராட்சி ஆணையாளர், மாநகரசபை மேயருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கத்திடம் கடன் வாங்குகையில், சோலைவரியை 6 சதவிகிதம் அதிகரிப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டதாம். ஒப்புக் கொண்டபடி வரியை ஏன் உயர்த்தவில்லை என்று கேட்க ஸ்தலஸ்தாபன கமிஷனருக்கு உரிமையுண்டுதான். மேலும் புதிய வசதிகள் நமக்குச் சும்மா கிடைக்க முடியாது. அதற்கு நாம் தியாகம் செய்யத்தான் வேண்டும். ஆனால் ஏற்கெனவே விதித்துள்ள 2 சத புதிய வரியையே கட்ட முடியாத ஏழைகளிடம் 6 சத வரியை வசூலிப்பதென்பது எப்படி?

இது ஒரு தர்மசங்கடமான விஷயம். குடிதண்ணீர் வசதியை மக்களுக்கு அளிக்க வேண்டியது மாநகரசபை, அரசாங்கம் இவற்றின் முக்கிய கடமையாகும். யாழ்ப்பாண மக்களுக்குக் குழாய் வசதிக்காக மத்திய அரசாங்கம் கொடுத்துள்ள கடனை நாம் திருப்பிச் செலுத்திவிட வேண்டியதே நாணயமாகும்; இன்னும் நம் நகர அபிவிருத்திக்கு அதிக உதவிகள் தேவையாகும். இவ்விஷயத்தில் நாம் நாணயமாக இருந்தாலே இனி அதிக உதவிகளையும் நாம் தைரியமாகக் கேட்க முடியும். என்றாலும் ஏழை எளியமக்களைப் பாதிக்காத முறையில் இத்தவணைகளைச் செலுத்துவதெப்படி என்பதே கேள்வி.

ஏழைகள் வசிக்கும் சிறிய வீடுகளுக்குப் புதிய வரியை விதிக்காமலும் கூட்டாமலும் வரிப்பளுவைத் தாங்கக் கூடிய செல்வந்தர்களுக்கு வரியை அதிகரிக்கலாம். இதேசமயம் மாநகரசபைக்கு புதிய வருமான இனங்களை மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டும். உதாரணமாக மரவரி மூலம் இப்பகுதியில் கிடைக்கும் வருமானத்தை இங்குள்ள மாநகர சபை முதலிய ஸ்தலஸ்தாபனங்களுக்கே அரசாங்கம் அனுமதிப்பதாயின் இப்பகுதியின் அபிவிருத்திக்கு அது பெரிதும் உதவக்கூடும். மத்திய அரசாங்கத்திடம் வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமும் மாநகரசபைக்கு அநேகமாக இல்லாது போகலாம். இவ்விஷயத்தைத் தக்கபடி யாழ்ப்பாண மாநகரசபை மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் பல மாநகர சபைகள், ஸ்தலஸ்தாபனங்கள் இவற்றின் ஆதரவையும் பெற்று தக்கபடி கிளர்ச்சி செய்தால் நல்லபலன் கிடைப்பதுடன் பொதுவாகப் பல ஊர்களுக்கும் புதிய வசதிகள் கிடைக்கவும் வழிபிறக்கும்.

## வாசிகசாலையின் 20-வது ஆண்டுவிழா

உரும்பராய், வியாழன்

உரும்பராய் ஞானோதய வாசிகசாலையின் 20-வது ஆண்டுவிழா வாசிகசாலை மண்டபத்தில் திரு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நிர்வாகசபையின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்:

தலைவர்: க. குலசிங்கம், உபதலைவர்: செ. சோமசுந்தரம், காரியதரிசி: க. விமலநாதன், உப-காரியதரிசி: சி. நாகராசா, தனதிகாரி: செ. சிவரத்தினம், உபதனதிகாரி: கு. அம்பிகாநந்தன், போஷகர்; திரு. ச. இராசதுரை.

நிர்வாகசபை அங்கத்தினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்: ச. கந்தசாமி, வி. இராசக்கோன், இ கணேசர், அ. நவரத்தினம், சு. செல்வரத்தினம், க. சோதிலிங்கம், சி. தர்மபாலசிங்கம், சி. தயாபரன், சி. கிருஷ்ணநந்தன், ச. வல்லிபுரம்.

கூட்டத்தில் பேசிய போஷகர், தலைவர் ஆகியோர் நிலைய முன்னேற்றத்தைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

கலைச்சிந்தனைகள்

## காருகுறிச்சி அருணசலம்பிள்ளை

பத்து வருடங்களுக்கு முன் ஒருநாள் ஆடிவேல் உற்சவம் நடந்து கொண்டிருந்தது. வெள்ளவத்தை சம்மாங்கோடு பிள்ளையார்கோயில் முன்றலில் பெரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றிவர ஏராளமான சங்கீத ரஸிகர் கூட்டம் கட்டுமஸ்தான தேகத்துடன் ஓர் இளைஞர் மேடைக்கு வந்து உட்கார்ந்தார். எல்லோரும் 'இவர்தானா அந்த அருணசலம்' என்று ஆவலோடு நோக்கினார்கள்.

சீவாளியை எடுத்து நாக்கில் நனைத்துக் கொண்டு கம்பீர நாட்டை ராகத்தோடு கச்சேரியை ஆரம்பித்தார் அருணசலம்பிள்ளை. அடுத்த மூன்று மணி நேரம் காலதேவனே ஸ்தம்பித்துப் போய்விட்டான். நாகபாசத்தால் கட்டுண்டவர்கள் போல அத்தனை லட்சம் பேரும் இருந்த இடத்தை விட்டு அகலாது மெய்ம் மறந்து ரஸித்துக்கொண்டிருந்தார்கள்.

காருகுறிச்சி இலங்கைக்கு வந்தது அதுவே முதல் தடவை என்று நினைக்கிறேன். அதற்குப்பின் நாலைந்து முறை அவர் இலங்கை வந்து போயிருக்கிறா. யாழ்ப்பாணத்தில் கடைசி முறையாக அவர் அராலி முத்துமாரியம்மன் கோயிலில் கச்சேரி செய்தார். அன்று வந்திருந்த ஜனத்திரளையும் கார்களையும் சைக்கிள்களையும் போல யாழ்ப்பாணத்தில் நான் முன்னொருபோதும் காணவில்லை.

அப்படி என்ன மாயப்பொடி தூவுகிறார் அருணசலம்! ஏன் இவ்வளவு ஜனங்கள் இடறி விழுந்துகொண்டு அவரைக் கேட்கப்போகிறார்கள்? எளிதில் மறுமொழி கூறிவிடலாம். அவருடைய குழலிருந்து வெளிப்படும் இசை, அசுர சாதகத்தாலும் அற்புதமான கற்பனையாலும் பிரமிக்கத்தக்க ஓசைக் கட்டுப்பாட்டினாலும், பண்படுத்தப்பட்டுக் கடைந்தெடுத்த நாதாமிர்தம். அவருடைய வாசிப்பில் ஓர் அபஸ்வரமோ பிசிறோ மூச்சிழுக்கும் சத்தமோ மருந்துக்கும் கிடையாது. உருப்படிகளை சனவேகத்தில், தாமே அமைத்துக்கொண்ட சில புதிய சங்கதி பிரஸ்தாரங்களுடன், நயம்பட வாசிக்கிறார். உசேனி ராகத்தில் 'ராமா நின்னே' என்ற தியாகராஜ கீர்த்தனைக்கு அவர் ஒரு தனியழகு கொடுத்துவிட்டார். அதைக் கேட்டவர்கள் விழி உருகி விம்மி அழுவதை நேரில் கண்டிருக்கிறேன். அதுபோலத்தான் 'நகுமோமு கனலே' என்ற ஆபேரி ராகக் கீர்த்தனம். அவருடைய இந்தக் கீர்த்தனத்தைப் பின்பற்றி இன்னும் யாழ்ப்பாணத்தில் உள்ள நாகரசுக்காரர்கள் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குழலில் கொடுக்கும் காற்று கட்டுமீறிப் போகாமல் சமயத்துக்குத் தக்கபடி சரியான அளவுகாற்றுகொடுத்துவாசிப்பதில் அவர் மிகச் சமர்த்தர். காற்றை அடக்கி மெல்லிய தாய் அவர் வாசிக்கும்போது ஒரோர் சமயம் கிளாரினட் போலும் புல்லாங்குழல் போலும் ஒலி கிளம்பும்.

'கொஞ்சும் சலங்கை' என்ற படத்தில் ஜானகி வாய்ப்பாட்டிலும், அருணசலம்பிள்ளை நாகசுரத்திலும் 'சிங்கார வேலனே தேவா' என்ற பாட்டை இசைப்பது அபூர்வமான ஒரு சாதனை. எது நாகசுரம், எது வாய்ப்பாட்டு என்று மயங்கும் அளவுக்கு இரண்டும், பருந்தும் நிழலும் போல, இசைந்துபோவது பிரமிக்கத்தக்கதாயிருக்கும்.

'இறைவனால் நேசிக்கப்படுகிறவர்கள் இளமையில் இறந்துபோவார்கள்' என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. இளம் வயதில் இறைவனடி சேர்ந்த கிட்டப்பா, முத்துக்கிருஷ்ணன் முதலிய இசை மேதைகளைப் பின்தொடர்ந்து காருக்குறிச்சியாரும் போய்விட்டார். அவருடைய மறைவால் இசைக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அளப்பிடமுடியாது.

— லாவண்யம்

## ஐயாறன் எழுதுவது

இரு நினைவு மலர்கள் இவ்வாரம் எனக்குக் கிடைத்தன. ஒன்று நீர்கொழும்பு நல்லதம்பியாரைப்பற்றியது. மற்றது, 'கோவை வாசரும் முத்தமிழ்ப் புலவரும் வித்தகக் கவிஞரும் சிவநேசச் செல்வரும் சரவணபவானந்த வித்தியாசாலையின் முன்னாள் தாபகரும் தலைமையாசிரியருமாயிருந்த ஸ்ரீமான் க. வே. சிதம்பரம்பிள்ளை' உபாத்தியாயர் அவர்களின் நினைவுக் காணிக்கையாக.

இதில் முதலது திருமுறைத் தொகுப்பு. 81 பக்கங்களடங்கியது. நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினரால் தொகுத்து வெளியிடப்பட்டது. மற்றது 'திருமுறைப் பூந்துணர்'. இரண்டிலும் கூட்டுப் பிரார்த்தனைக்கான பல அருமையான பாடல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஈழத்திலே சைவப்பிரமுகர்கள் யாரும் மறைந்தால் அவர்கள் நினைவாக இவ்வித புனித மலர்களை வெளியிட்டு இலவசமாக விநியோகிக்கும் நல்ல வழக்கம் இருந்துவருகின்றது. தமிழகத்தில் இவ்விதமுறை எனக்குத் தெரிந்து இல்லை. கூட்டுப் பிரார்த்தனை இயக்கம் வளர இவ்வித நினைவுமலர்கள் நன்கு பயன்படவேண்டும்.

* * *

நல்லதம்பியாரைப் பற்றிய மலரிலே, சேர் கந்தையா வைத்தியநாதன் சிறப்பான அணிந்துரை எழுதியுள்ளார். "சமயத் தொண்டையும் சமூகத்தொண்டையும் சரிவர ஆற்றித் தன் வாழ்நாள் முழுவதையும் மக்கள் பொதுநன்மையிற் செலுத்தி இந்நூற்றாண்டில் வாழ்ந்துகாட்டிய வள்ளல்களில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை திரு. இ. நல்லதம்பி அவர்கள் அடைந்துவிட்டாரென்றால் மிகையாகாது. அவர் மறைவு 48 வயதில் நேரிடாவிடில் இன்னும் வேறு உயர்வைப் பெற்றிருப்பாரென்பதில் ஐயமில்லை...

"அவரது பிறந்த (கருவில்) கிராமப் பற்றும் சிறிதல்ல. அதன் நல்வாழ்வுக்குச் செய்து முடித்த சேவைகள் பல. திருக்கேதீச்சர யாத்திரை வசதிக்காக அவர்களுக்கென ஒரு மடம் அவ்விடமிருக்க வேண்டுமென்று நிச்சயித்துப் படம்போட்டார். அதோடு அவ்விடத்தில் நடைபெறும் நல்ல சேவைகளையும் கண்காணித்துவந்தார். அவை ஒன்றையும் நிறைவேற்றவிடாமல் காலத்தச்சன் குறுக்கே நின்றான். அது நமது நட்டம்" என்று வருத்தத்துடன் குறிப்பிடுகிறார் திருப்பணித் தலைவர். ஆனால் நல்லதம்பியாரின் இந்தப் புனித நோக்கத்தை, அந்த ஊரார் நிறைவேற்றி வைப்பார்களென்பதே நம் பிக்கை.

* * *

ஓர் உருக்கமான கதை கேள்விப்பட்டேன். நல்லதம்பியார் ஆஸ்பத்திரியிலே சிகிச்சை பெறுகையில், ஓர் ஏழைக் கோயில் குருக்கள், தன் பெண்ணுக்குக் கல்யாணமென்று அவரைக் கண்டு தெரிவித்தாராம். ஆஸ்பத்திரியில் இருந்தபடியே, அந்த வள்ளல் 1300 ரூபாய் ரொக்கமாக அளித்ததுடன், தம் கடையிலே, விவாகத்துக்கு வேண்டிய சாமான்களையும் இலவசமாக வாங்கிக்கொள்ளும்படி சொன்னாராம். விவாகத்துக்கு முன், அவர் மறைந்துவிட்ட செய்தியை வானொலி மூலம் கேட்ட அக்குருக்கள் வீட்டாருக்கு இடிவிழுந்து போயிருந்ததாக ஓரன்பர் தெரிவித்தார். இன்னும் இப்படி வலது கை கொடுத்தது இடதுகைக்குத் தெரியாமல் எவ்வளவு தர்மமோ!

மற்றோர் எளிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் விவாகத்துக்காக வேறொரு

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அன்பர் ரொக்கமாக 5000 ரூபாய் கொடுத்தாராம்! பெண்ணின் தந்தையார் நன்றியுடன் இதைத் தெரிவித்ததைக் கேட்டதும் ஈழத்தைப் பற்றி என் மதிப்பும் நம்பிக்கையும் உயர்ந்தது. இவ்வித புண்ணியவான்கள் காட்டிய வழியைப் பலரும் பின்பற்றினால் நம் சமூகம் எவ்வளவோ மேலாக இருக்குமல்லவா?

* * *

முத்தமிழ் வித்தகரைப் பற்றிய மலரிலே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியிருப்பதாவது:

திரு. வே. சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர் அறிவாலும் வயதாலும் முதிர்ந்தவர். ஆனால் என்றும் இளைஞர். சைவவித்தியா விருத்திச் சங்க ஆசிரியர் குழு எண்ணிக்கையில் ஆயிரத்தைக் கடந்தது. அக்குழுவில் தனிச் சிங்கமாய் பிரத்தியேக மனிதராய் விளங்கியவர் ஆசிரியர் பிள்ளை அவர்கள். அவரை ஒருமுறை கண்டவர்கள் பிறகு அவரை மறப்பதென்பது இயலாத காரியம். அவருக்கு இயலாததென்று ஒன்று இல்லை. பல்வேறு கலைத்துறைகளில் முன்னணியில் நின்றவர் அவர். இத்தகைய ஆசிரியரின் பிரிவு 'உவப்பத்தலைக் கூடி...' என்ற குறளில் வரும் உள்ளப்பிரிவு.

இப்படியான பெரியார்களின் பிரிவு நமக்கு எவ்வளவு நஷ்டம்!

* * *

மூவனை மூர்த்தியை மூவா மேனியுடையானை மூவுலகுந் தானேயெங்கும், பாவனைப் பாவ மறுப்பான் தன்னைப் படியெழுதலாகாத மங்கையோடு, மேவனை விண்ணோர் நடுக்கங் கண்டு விரிகடலின் நஞ்சுண்ட முதமீந்த, தேவனைத் தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

—திருநாவுக்கரசர்.

## சகாயநிதிச்சங்க நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியா

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியர் சகாயநிதிச் சங்கவருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.விக்ரர்பிலிப்ஸ் உபதலைவர் திரு. ஆ. சபாரத்னம், காரியதரிசி திரு. வ அம்பலவாணநாதர், தனதிகாரி: திரு. த. சுந்தரலிங்கம்.

## கலைக்குவியலுக்கு வெற்றி

காங்கேசன்துறை, புதன்

கல்வியங்காடு கலைக்குவியல் விளையாட்டு மன்றத்திற்கும் திருநெல்வேலி லிபர்ட்டி விளையாட்டு மன்றத்திற்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் கலைக்குவியல் ஒரு இன்னிங்ஸ் 3 றன்களால் வெற்றிபெற்றது.

## கைப்பந்தாட்டம்

உடுப்பிட்டி, வியாழன்

பருத்தித்துறை விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை விளையாட்டுச் கழகத்திற்கும் இமையாணன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் பருத்தித்துறை விளையாட்டுக்கழகம் முதலிரு ஆட்டங்களையும் கவிகரித்து வெற்றியீட்டியது.

# ‘இந்தோனேஷியாவுடனான சண்டை நிறுத்தம் முடிவடைந்துவிட்டது!’

## மலேசிய பிரதமர் அறிவிப்பு:

## அமெரிக்கஅதிகாரிகள் எச்சரிக்கை

### போர் மூண்டால் மலேசியாவே பாதிக்குமாம்

ஈப்போ, ஏப். 9

**ஈப்போவில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் மலேஸியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் பேசுகையில், இந்தோனேஷியாவுடனான சண்டை நிறுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்துள்ளார்.**

**மலேசியாவின் நடவடிக்கை அமெரிக்கா கண்டித்துள்ளது. இந்தோனேஷியாவுடன் மலேசியா, புதிய யுத்தத்தில் இறங்கினுல், மலேசியாவுக்குக் கேடுவிளையுமென்று அமெரிக்க அதிகாரிகள் மலேசியப் பிரதமருக்கு எச்சரிக்கை செய்துள்ளனர்.**

**பிரதமர் பேச்சு**

வடக்கு மலாயாவிலுள்ள ஈப்போவில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் உரை நிகழ்த்துகையில், கடந்த சில வாரங்களில் பல எல்லைச்சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் இந்தோனேஷியாவின் அடக்குமுறைகளுக்கு மலேசியா பணிந்துவிடாதென்றும் கூறினர்.

“சபாவில் இனிமேல் யுத்த நிறுத்தம் இல்லையென்றே கருதுகின்றேன். இந்தோனேஷியாவுடனான யுத்தநிறுத்தம் முடிவாகிவிட்டதென்றே மலேசியா கருதுகிறது” என்றும் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் கூறியுள்ளார்.

மலேசியாவின் இந்த முடிவு யுத்தத்தை ஏற்படுத்த வகை செய்கிறதென்றும் இந்தோனேஷிய—மலேசிய நெருக்கடி மிகவும் மோசமாகிவிட்டதுடன் பலத்த விளைவுகள் ஏற்படலாமென்றும் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

**அமெரிக்கா எச்சரிக்கை**

இந்தோனேஷிய — மலேசிய யுத்தநிறுத்தம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் சிலர் மலேசியப் பிரதமரைக் கேட்டுள்ளனர்.

புதிய மோதல் எதிலும் ஈடுபட வேண்டாமென்றும் மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானை அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவுடனான புதிய யுத்தமொன்றில் மலேசியா பங்கெடுக்குமானுல் அது மலேசியாவுக்கே கேடுவிளைவிக்கும் என்றும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

**யுத்தத்திற்கு இளைஞர் தயார்**

20,000 இந்தோனேஷிய இளைஞர்கள் யுத்தத்துக்கு இறங்கத் தயாராகவிருக்கின்றனர் என்று ஜாகர்த்தாவில் வெளியான செய்தியொன்று கூறுகிறது. தங்கள் நாட்டைப் பாதுகாக்க யுத்தமொன்றில் இறங்க மலேசியர்களும் தயாராகவிருக்கிறுர்கள் என்று மலேசியப் பிரதமர் திரு துங்குஅப்துல் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

---

<u>இறக்குமதி மீதான</u>

## காப்பு வரித்தடைகளை ரஷ்யா நீக்கியது

ஜெனீவா, ஏப். 9

அபிவிருத்தியடையாத நாடுகளிடமிருந்து இறக்குமதிசெய்யப்படும் பொருள்களுக்குரிய காப்பு வரித் தடைகளை ரஷ்யா நீக்கிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் உலகவர்த்தக மகாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்யப் பிரதிநிதி நேற்று உரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறு கூறினர். ரஷ்யாவின் இந்த முடிவை இந்தியா உட்பட பல நாடுகள் வரவேற்றன.

ரஷ்யப் பிரதிநிதிதொடர்ந்து பேசுகையில், மேம்பாடு குறைந்தநாடுகளுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டே இந்த முடிவை ரஷ்யா செய்துள்ளதென்றும் அபிவிருத்தியடையாத நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குரிய காப்புவரிகளை அடுத்தவருடம் ஜனவரிமாதம் முதல் சோவியத் யூனியன் அறவிடாது என்றும் கூறினர்.

---

## ஷேக் அப்துல்லாவுக்கு ஜம்முவில் பெரும் வரவேற்பு

ஜம்மு, ஏப். 9

பத்து வருடங்களின் பின்னர் திரு. ஷேக் அப்துல்லாவைக் கண்ட ஜம்மு மக்கள் நேற்று அவருக்கு மகிழ்ச்சிகரமான வரவேற்பொன்று அளித்தனர்.

திரு. ஷேக் அப்துல்லா நேற்று, வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். மக்கள் திரள் திரளாக நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து மலர் மாலைகளை அணிவித்தனர்.

நேற்றுமாலை ஜம்முவில் நடைபெற்ற பிரமாண்டமான ஒரு பொதுக் கூட்டத்தில் திரு. ஷேக் அப்துல்லா உரை நிகழ்த்துகையில், மக்கள் எல்லோரும் ஒற்றுமையுடனிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

“இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு முயற்சிக்கவேண்டும். இந்து-முஸ்லிம்-சீக்கியர் ஒற்றுமையாகவிருக்க வேண்டும்” என்று எழுதப்பட்ட பல சுலோகங்களை பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் வைத்திருந்தனர்

இதற்கு முன்னர், திரு. ஷேக் அபதுல்லா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட பொழுது “இந்து-முஸ்லிம் ஒற்றுமை வாழ்க” என்று மக்கள் கோஷமிட்டுச் சென்றனர்.

---

## பிரதமர் நேருவை ஹபிபுல்லாகான் சந்தித்தார்

### உள்துறை மந்திரிகள் பேச்சுகளில் நல்ல அறிகுறிகள்

புதுடில்லி, ஏப். 9

இந்திய-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகள் மகாநாட்டில் நியமிக்கப்பட்ட இரண்டு கமிட்டிகளும் நேற்றுக் கூடி ஆலோசனை நடத்தின. இரு கமிட்டிகளும் நடத்திய ஆலோசனைகள் நல்ல சூழ்நிலையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரு கமிட்டிகளும் இன்று மீண்டும் கூடி ஆலோசனை நடத்தின.

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா நேற்று தமது உயர் ஆலோசகர்களுடன் பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகானுடன் பேச்சுகள் நடத்தினர். இந்தப் பேச்சுகளில் பல முக்கிய பிரச்னைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகான் நேற்று இந்தியப் பிரதமர் நேருவையும் உப ராஷ்டிரபதி ஸாகீர் ஹுசெய்னையும் சந்தித்தார்.

நேற்றிரவு, இந்திய மறுவாழ்வளிப்பு மந்திரி திரு. கன்னு திரு. ஹபிபுல்லா கானுக்கு விருந்தொன்றளித்தார்.

இந்திய-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகள் இன்று சந்தித்துப் பேச்சுகள் நடத்தி

ஞர்களென்று மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மகாநாட்டினுல் நியமிக்கப்பட்ட இரு கமிட்டிகளும் தங்களது பிரச்னைகளுக்குத் தீர்வுகண்ட பின்னரே உள்துறை மந்திரிகள் மீண்டும் கூடிப் பேச்சுகள் நடத்துவார்களென்று கூறப்படுகிறது. அநேகமாக நாளை வெள்ளிக்கிழமை அவர்கள் மீண்டும் சந்திப்பார்களெனத் தெரியவருகிறது.

---

<u>உலகவர்த்தக மகாநாட்டில்</u>

## தென்னுபிரிக்காவுக்கு கிடைத்த “வெகுமதி”!

### பிரதிநிதி பேச ஆரம்பித்ததும் 80 பிரதிநிதிகள் வெளியேறினர்

ஜெனிவா, ஏப். 9

ஜெனிவாவில் நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் போர்த்துக்கல்லுக்குக் கிடைத்த “வெகுமதி” நேற்று தென்னுபிரிக்காவுக்கும் கிடைத்துள்ளது!

இங்கு நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் தென்னுபிரிக்கா நாட்டின் பொருளாதார விவகார மந்திரி உரை நிகழ்த்த எழுந்த பொழுது, மகாநாட்டில் கலந்து கொண்ட 80 பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தனர்.

தென்னுபிரிக்கா கடைப்பிடித்து வரும் இன ஒதுக்கல் கொள்கைகளைக் கண்டிக்கும் முகமாகவே மேற் கூடிய பிரதிநிதிகள் நேற்று மகாநாட்டிலிருந்து வெளியேறினர்.

இந்த மகாநாட்டில் நேற்றைய முன்தினம் போர்த்துக்கல் பிரதிநிதி உரை நிகழ்த்த ஆரம்பித்த பொழுது 80 பிரதிநிதிகள் மகாநாட்டை விட்டு வெளிநடப்பு செய்தனர். போர்த்துக்கல் கடைப்பிடிக்கும் காலனிக் கொள்கையே இதற்குக் காரணமாகும்.

ஜெனிவாவில் நடைபெறும் இம்மகாநாட்டில் 120 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

---

## இலங்கைப்பிரதமருக்கு ஸ்ரீ நேரு கடிதம்

புதுடில்லி, ஏப். 9

இலங்கைப் பிரதமர் அனுப்பிய கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் பதிலளித்து விட்டதாக இங்கு அறிவிககப் பட்டுள்ளது.

சீன-இந்திய எல்லைத் தகராறு சம்பந்தமாக சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியப் பிரதமர் நேருவுக்கு கடிதமெழுதியிருந்தார்.

இலங்கைப் பிரதமரின் கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் பதிலளித்து விட்டதாக அறிவிக்கப்பட்ட பொழுதிலும் கடிதத்தின் விபரம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

---

## தேவ் ஆனந்தின் ஆங்கிலப் படம்

### ஐ. நா. அரங்கில் காட்ட ஏற்பாடு

நியூயார்க், ஏப். 9

“வழி காட்டி” என்ற தேவ் ஆனந்தின் புதிய ஆங்கில மொழிப் படம் ஐ. நா. வில் டாக் ஹமஷீல்ட் நூலகத்து அரங்கில் இன்று முதன் முதலாகத் திரையிடப்படும்.

இந்திய திரைப்பட நட்சத்திரத்தின் இப்படம் அமெரிக்க கம்பெனி ஒன்றுடன் சேர்ந்து கூட்டாகத தயாரிக்கப் பட்டது. ஐ. நா. திரைப்பட சங்கத்தின் ஆதரவில் இது ஐ. நா. வில் திரையிடப்படுகிறது. இச் சங்கத்தில் ஐ. நா. ஊழியர்கள், பல நாடுகளின் தூதுக் குழு உறுப்பினர்கள் சிறப்பு நிலையங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

இத்திரைப்படக் காட்சியை ஆனந்த், அவருடைய கூட்டு அமெரிக்கத் தயாரிப்பாளர்களான டைரக்டர் டாடு டானியல் இவ்ளகி, நாவலாசிரியை பேர்ல் பக் ஆகியோரும் பார்வையிடுவர்.

நோபல் பரிசுபெற்ற பேர்ல் பக் “வழி காட்டிக்கு”த் திரைப்படக் கதையை எழுதினர்.

உலகத் திரைப்பட மார்க்கெட்டிற்கு தயாரிக்கப் பட்ட முதலாவது இந்தியப் படம் இந்த “வழி காட்டி” என்றுர் ஆனந்த். யு. எஸ். திரைப்பட மாக்கெட்டிற்கு இந்த “வழி காட்டி” வழி காட்டியாக இருக்கும் என்று தாம் நம்புவதாகவும் அவர் சொன்னுர். நியூயார்க்கில் செப்டம்பர் மாதம முதன் முதலாக இப்படம் எல்லோரும் பார்க்க திரையிடப் படும்.

---

## விண்வெளிக் கப்பல்

### அமெரிக்கா அனுப்பியது

கேப்கெனடி, ஏப். 9

ஏழாயிரம் ருத்தல் நிறையுள்ள வானவெளிக்கப்பலொன்றை அமெரிக்கா அனுப்பியது.

சந்திரமண்டலத்துக்கு மனிதனை அனுப்பும் முன்னேடியாகவே இக்கப்பல் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

---

## அகதிகளுக்கு மறு வாழ்வு

புதுடில்லி, ஏப். 9

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த 25,000 அகதிக் குடும்பங்களுக்கு மறுவாழ்வளிக்க மத்திய பிரதேச அரசாங்கம் முன் வந்துள்ளது. இது சம்பந்தமான திட்டமொன்றை, மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

இது போல் 2000 அகதிக் குடும்பங்களுக்கு மறுவாழ்வளிக்க ஆந்திர பிரதேச அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

---

## “பூட்டான் வீரரை இழந்தோம்”

காங்டொக், ஏப். 9

பூட்டான் பிரதமரின் மறைவு குறித்து பூட்டான் மகாராஜா வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஒரு வீரனை பூட்டான் இழந்துவிட்டதென்றும் எதிரிகளே கிடையாத பிரதமர் கொலை செய்யப்பட்டது பெரும் ஆச்சரியத்தை அளிக்கிறதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

## தடுப்பு நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

கொழும்பு துறைமுகத்தின் மூலம் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைத் தடை செய்ய ஒன்பது கடற்படை உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

# "எங்களைக் கண்டதும் எதிரி பாய்ந்தோடினர்"

## இ. போ. ச. டயர் திருட்டு வழக்கில் உதவி என்ஜினியர் சாட்சியம்

காங்கேசன்துறை, வியா.

மல்லாகம் இ. போ. ச. டிப்போவிலிருந்து 6 டயர்களை திருடியதாகவும், அல்லது திருடப்பட்ட டயர்களை வைத்திருந்ததாகவும் அதே கிராமத்தைச் சேர்ந்த ஏ. சாமிநாதன் என்பவர் மீது சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். ஏச். அத்துறுபான முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மல்லாகம் இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த உதவி என்ஜினியர் திரு. ஜே. மகேந்திரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: மல்லாகம் டிப்போவிலிருந்து டயர்கள் காணமல் போய்விட்டதாக கடந்த மாதம் 10-ம் தேதியன்று எனக்கு தெரியவந்தது. 13-ம் தேதியன்று எனக்கு கிடைத்த ஒரு தகவலில் காணமற்போன டயர்கள் மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவரின் லொறியில் பொருத்தப்பட்டதாக கூறப்பட்டிருந்தது. அந்த லொறியும் மல்லாகம் பெட்ரோல் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அத்தகவலில் மேலும் கூறப்பட்டிருந்தது. மேற்கூறிய தகவலை பொலிசாருக்கு தெரிவிப்பதற்காக நான் சுன்னாகம் பொலிஸ் நிலயத்தை நோக்கிச் சென்றேன். போகும்வழியில் இரு பொலிசாரை நான் சந்தித்தேன். அவர்களிடம் இத்தகவலைத் தெரிவித்து பெட்ரோல் நிலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியை பார்வையிடும்படி வேண்டினேன்.

பொலிசாருடன் நானும் பெட்ரோல் நிலயத்தை நோக்கிச் சென்ற போது லொறிக்குள் இருந்த எதிரி பாய்ந்து ஓடினர். பொலிசார் அவரை பின்தொடர்ந்தனர். சிறிது நேரத்தில் பொலிசார் பெட்ரோல் நிலயத்துக்கு திரும்பி வந்து, எதிரி ஓடிவிட்டதால் அவரைக் கைதுசெய்ய முடியவில்லையென தெரிவித்து எதிரியால் நிறுத்தப்பட்டிருந்த லொறியை பரிசோதனைசெய்து காணமற்போன டயர்கள் அதில் இருக்க கண்டுபிடித்தனர். பொலிசார் லொறியை தமது பாதுகாப்பில் எடுத்துச்சென்றனர்.

சப். இன்ஸ்பெக்டர் திரு. சி. என். தியாகராசாவும் சாட்சியம் அளித்தார். எதிரி தான் சுற்றவாளியெனக் கூறினர். திருடப்பட்ட டயர்களை தவிர்த்து லொறியை 5000 ரூபா பிணை செலுத்தி எடுத்துச் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

சுன்னாகம் பொலிஸ்நிலய அதிபர் எஸ். விக்னேஸ்வரமூர்த்தியின் உதவியுடன் திரு. எஸ். நடராசா வழக்கை நடத்தினர். திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆர். கண்ணுத்துரை எதிரி தரப்பில் ஆஜரானர்

றீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.
Tony Curtis
James Francisus
in
Universal International's
THE
OUTSIDER

3வது வெற்றிகரமான புகழ் வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி
மற்றும்பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்

ஆசிரியருக்குக் கடிதம்

## க்ஷயரோக கிருமிகள்

7-4-64 ஈழநாடு இதழில் க்ஷயரோகத்தைத் தடுக்கும் வழி என்ற தலையங்கத்துடன் வெளி வந்த கட்டுரையைக் கண்ணுற்றேன். அதில் கூறப்பட்டவை மக்களுக்கு மிகவும் தெளிவான அறிவைத் தருகிறது.

ஒருசில நகரவாசிகளைவிட மீதமான அனேகர் நாட்டில் சாதாரண வாழ்க்கை தான் வாழ்கின்றுகள். அவர்களுடைய வீடுகளில் ஆடு, மாடு, கோழி, புறு, வாத்து இவைகளை வளர்த்துச் சீவியம் நடத்துகிறார்கள். இவ்வித பிராணிகளுடன் சதாகாலமும் பழகிப் புழங்கி வரும் மக்களுக்கு கசக்கிருமிகளாகிய 'பசிலி' மிருகங்களிடமிருந்தும் பறவைகளிடமிருந்தும் தொற்றக்கூடிய நிலை சில மிருகங்களிடத்தும் சில பறவைகளிடத்தும் உண்டல்லவா? மிருகங்களிடமிருந்து நமக்குத் தொற்றும் 'பொவைன் பசிலி' பறவைகளிடமிருந்து நமக்குத் தோற்றும் 'ஏவியன் பசிலி' இவைகளைப் பற்றி மக்கள் அறிந்திருந்தால் அவற்றையுந் தடுக்க வழிவகை, ஏற்ற சிகிச்சை செய்வார்களல்லவா?

ஆண்டவனுல் நமக்கென நம்முடலுள் படைத்துவிட்ட 'வியூகோசைற்' கிருமிகள் நமக்குள் போதியளவிருந்தால் 'பசிலி' கிருமிகளுடன் பெரிய போர் தொடுத்து பசிலிகளைக் கொன்றுவிடுகின்றனவல்லவா? இந்த வியூற் கோசை கிருமிகள் நம் உடலில் போதியளவு உற்பத்தியாகுவதற்கு நாம் செய்யவேண்டிய வழிகள் யாவை?

இவற்றையெல்லாம் மேலும் தெளிவுபடுத்தினுல் பொது மக்களுக்கு பயன் கிடைக்கும்.

வைத்தியர்
க சி. பரிபூரணுநந்தர்
யாழ்ப்பாணம்.

## மேற்பார்வை அதிகாரியாக நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரைச் சேர்ந்த திரு. ஏ. வி. கந்தசாமி, மேற்பார்வை அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்

அகில இலங்கை போஸ்ட் மாஸ்டர்கள் யூனியனின் யாழ்ப்பாணக்கிளைத் தலைவரும் பொதுச்சேவை தொழிலாளர் தொழிற்சங்கத்தின் வடபகுதிக் கிளைத் தலைவருமான திரு. ஏ. வி. கந்தசாமி, இரண்டாம் வகுப்பு போஸ்ட் மாஸ்டராக விருந்து முதலாம் வகுப்பு போஸ்ட் மாஸ்டராகப் பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரின்மேற்பார்வை அதிகாருயாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க சமயப் பிரசாரசபையினரால் நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் இன்று மாலை 6-45 மணி முதல் 8மணி வரை பண்டிதர் பொ. ஜகநாதன் "முருகன் வழிபாடும் சங்க நூல்களும்" என்னும் பொருள் பற்றியும், மேற்படி சங்க ஆதரவில் மாலை 6 மணி முதல் 7மணி வரை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஆசிரியர் திரு. ச. சதாசிவம் 'சிவன்" என்னும் பொருள் பற்றியும், புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீமுருகன் ஆலயத்தில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை ஆசிரியர் திரு. வி. கார்த்திகேசு "அடியார்க்கெளியோன் சிற்றம்பலவன்" என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நடைபெறும்.

# புதுவருடதினத்தை யொட்டி தேசியதின விழா

## யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஏற்பாடு

நல்லூர், வெள்ளி

புதுவருடப்பிறப்பை யொட்டி இம்மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்தில் தேசியதின விழாவொன்று நடத்தப்பட இருக்கின்றது. யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியினராலும், யாழ்ப்பாணக் காரியாதிகாரி, அவரது உத்தியோகத்தர்களாலும் இவ்விழா கொண்டாடப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் முற்றவெளி திறந்தவெளி அரங்கில் தேசிய தினவிழா நடத்தப்படும். மின்னெளி கரபந்தாட்ட இறுதிப் போட்டி, தலையணை யுத்தம், வழுக்குமரம், கயிறு இழுத்தல், விநோத உடைப் போட்டி, சிறுவர்களின் ஓட்டப்பந்தயம் என்பன முற்றவெளி மைதானத்திலும், குருநகர் கடற்கரையில் நீச்சல் போட்டியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. விசேஷ நிகழ்ச்சிகளாக நாட்டியம், நாடகம், காவடி ஆட்டம், வாத்தியக் கச்சேரி, கிராமிய நடனங்கள், சீனடி சிலம்படி என்பனவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் அமெரிக்க விஞ்ஞான அரங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அமெரிக்க விஞ்ஞான திரைப்பட கழகத்தினரும், அமெரிக்க தகவல் இலாகாவும் இலங்கையில் விஞ்ஞான அரங்கமொன்றை நடாத்த பூர்வாங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். இவ்வரங்கம் இம்மாதம் 27-ந் திகதி முதல் மே மாதம் 8-ந் திகதி வரை நடைபெறும்.

இலங்கையில் விஞ்ஞானக் கல்வியை வளர்ச்சியுறச் செய்வதற்காக அமெரிக்க தகவல் இலாகா மேற்கொண்டுள்ள இப்பணியில் கல்வி இலாகாவும், இலங்கை விஞ்ஞான முன்னேற்றக்கழகமும் ஒத்துழைக்கின்றன

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் நடைபெறும் இவ்விஞ்ஞான அரங்கில் ஆராய்ச்சியாளர், ஆசிரியர், மாணவர், பாமர மக்களுக்கு அறிவூட்டும் பல திரைபபடக் காட்சிளும் இடம் பெறும்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் இம்மாதம் 27-ந் திகதி ஆரம்பிக்கும் இவ்வரங்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

நாடோறும் இவ்வரங்கில் பாடசாலை மாணவர்களுக்கென பொது விஞ்ஞானக் காட்சியும், ஆசிரியர்கள், பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கென விஞ்ஞான கல்விப் பிரிவும், பல்கலைக்கழக மாணவர் உட்பட பல்வேறு விஞ்ஞானப் பீடங்களுக்கென விசேஷ விஞ்ஞானப் பிரிவும், ஆராய்ச்சியாளர், விஞ்ஞானிகளுக்கென மற்றொரு பிரிவும் இடம் பெறும்

பிரசாதப அரங்கம் யாழ்ப்பாணத்தில் மே மாதம் 4-ம், 5-ம் திகதிகளிலும், கண்டியில் 7-ம், 8-ம் திகதிகளிலும் நடைபெறும்.

இவ்விஞ்ஞான அரங்கம் கடந்த வருடத்தில் இந்தியாவில் புதுடில்லி, மதுரை, கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெற்றது.

## யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் தடுப்பு சங்கம்

சுழிபுரம், வெள்ளி

இலங்கை புற்றுநோய் தடுப்புச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மாலை 4-30 மணிக்கு மானிப்பாயிலுள்ள சீற்றி கட்டடத்தில் சமூகஜோதி சி. தியாகராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது வடபகுதியில் புற்றுநோய் தடுப்பு நடவடிக்கையில் கையாளப்படும் வழிவகைகள் பற்றி பல வைத்திய நிபுணர்கள் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்த இருக்கின்றுர்கள்.

## காருகுறிச்சிக்கு யாழ்ப்பாணத்தில் அனுதாபக் கூட்டம்

நல்லூர், வியாழன்

காலஞ்சென்ற நாதசுர வித்துவான் காருகுறிச்சி திரு. பி. அருணசலம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ்ப்பாணத்திலுள்ள நாதஸ்வர, தவில் வித்துவான்கள், சங்கீத ரசிகர்கள வருத்தந் தெரிவித்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள் திரு. அருணசலத்தின் ஆத்மசாந்தியை நாடும் வகையில் அனுதாபக்கூட்ட மொன்று யாழ்ப்பாணத்தில் இவ்வார இறுதியில் நடத்தப்படவிருக்கின்றது.

இலங்கையிலுள்ள சங்கீத ரசிகர்கள் பெரிதும் விரும்பும் காருக்குறிச்சியின் நாதஸ்வர இசை செவிக்கு இனிமையளிப்பதாக உள்ளது. 48 வயதுடையவரான காருகுறிச்சி ராக ஆலாபனை, பிர்கா, கமகங்கள் வாசிப்பதில் தன்னிகரற்று விளங்கியதாக யாழ். இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தினர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

சங்கீத வித்வான்களுக்கும், ரசிகர்களுக்கும் பேரதிர்ச்சி அளித்துள்ள திரு. அருணசலத்தின் மறைவக்கு அஞ்சலி செய்யுமுகமாக இவ்வார இறுதியில் அனுதாபக்கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நாடக சபை அனுதாபம்

உடுப்பிட்டி, வியாழன்

நாதஸ்வர மன்னன் காருகுறிச்சி அருணசலத்தின் மறைவுகுறித்து அனுதாபச் செய்தியொன்றை நெல்லியடி சண்முகானந்த நாடக சபையின் சார்பில் அதன் தலைவரான கலைக்குரிசில் மு. கந்தவனம் இந்தியாவிலுள்ள அருணசலத்தின் சுற்றத்தவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## நீச்சல் முயற்சியில் இளைஞர்

உடுப்பிட்டி, வியாழன்

பாக்குநீரிணையைக் கடக்கும் முயற்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டுள்ள பருத்தித்துறையைச் சேர்ந்த என். சிவஞானசுந்தரம் (22 வயது) என்னும் இளைஞர் செவ்வாய்க்கிழமை மாலை திக்கம் கடற்கரையிலிருந்து நீந்த ஆரம்பித்து ஒரு மணிநேரத்தில் மிருகமுனை என்னுமிடத்தை யடைந்து பின்னர் பருத்தித்துறை துறைமுகக் கரையை வந்தடையும்போது நீர்ச்சுழலில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்தபோது கரையில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களால் காப்பாற்றப் பட்டுக் கரைசேர்ந்தார்.

இச் சம்பவத்தை கேள்விப்பட்டதும் நூற்றுக்கணக்கான மக்கள் திரளாகப் பருத்தித்துறை துறைமுகத்தையடைந்து அவரைப் பார்வையிட்டு ஆசியும் கூறினர்.

திடகாத்திரமான தேகமுடைய இவ் வீரர் தனிமையிலேயே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். எப்படியும் வைகாசி மாத இறுதியில் இவர் பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து பாக்குநீரிணையைக் கடப்பார் என நம்பப்படுகிறது.

# கிரிக்கெட் சீஸனில் ஹாட்லியின் இடம்

## நடராசசுந்தரத்தின் கிரிக்கெட் ஆட்டம் பாராட்டக்கூடியது

யாழ்ப்பாணம், வெள்ளி 1964-ம் ஆண்டின் கிரிக்கெட் சீஸனில் ஹாட்லிக் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டி வழமைபோல் திறமையாக விளையாடி முடித்திருக்கிறது. ஹாட்லிக் கல்லூரிக்கும் இதர பத்து கல்லூரிகளுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லி ஆறு கல்லூரிகளுடன் வெற்றி பெற்றுள்ளதுடன் ஒரு கல்லூரியுடன் சமவெற்றியும் பெற்றுள்ளது. இவற்றுள் நான்கு கல்லூரிகளை இன்னிங்ஸால் வெற்றியீட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிகளுடனன கிரிக்கெட் போட்டிகளில் ஹாட்டிக் கல்லூரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை இன்னிங்ஸாலும் 103 ஓட்டங்களினாலும் வெற்றியீட்டியுள்ளது. மேலும் கொக்குவில் இந்துக் கல்லூரியை இன்னிங்ஸாலும் 167 ஓட்டங்களாலும், மகாஜனக் கல்லூரியை இன்னிங்ஸ் 18 ஓட்டங்களாலும். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை இன்னிங்ஸ் 49 ஓட்டங்களாலும் ஹாட்லிக் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது. இது தவிர யாழ்ப்பாணச் கல்லூரியுடன் விளையாடியதில் ஹாட்லிக் கல்லூரி இரண்டு விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியுடன் சமவெற்றியீட்டிய ஹாட்லிக் கல்லூரி சென். பங்கிரஸ், அந்தனிரோதயா, கண்டி சென். சில்வேஸ்டர்ஸ் கல்லூரிகளிடம் தோல்வியடைந்திருக்கிறது. இம்மூன்று கல்லூரிகளிலும் சென். சில்வேஸ்டர்ஸ் கல்லூரியுடன் விளையாடியதில் ஹாட்லிக் கல்லூரி இனிங்ஸாலும் 49 ஓட்டங்களாலும் தோல்வி பெற்றுள்ளது.

ஹாட்லிக் கல்லூரியின் உப கப்டனாகிய மா. நடராசசுந்தரம், இலங்கைப் பாடசாலைகளிலுள்ள ஒரு சிறந்த 'ஆல்ரவுண்டராக' விளங்கியுள்ளார். இவர் இருமுறைகளில் நூறு ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார் (120 சென். ஜோன்ஸ் கல்லூரியுடனும், 159 கொக்குவில் இந்துக கல்லூரியுடனும்), இது தவிர இரு முறைகளில், ஐம்பது ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளார். மொத்தமாக இம்முறை 759 ஓட்டங்களைப்பெற்று இவர் இரண்டு சிக்ஸர்களும் நூற்றுப் பதினொரு 'பவுண்டரிகளும்' 16 இனிங்ஸ்களில் எடுத்து 47.44 சராசரி ஓட்டங்களைப் பெற்றது பாராட்டத்தக்கது. இவரின் கூட்டுத்தொகை இலங்கை மாணவர்களில் முதல் இடத்தைப் பெறுகிறது.

இவர் துடுப்பெடுத்தாடுவதில் மாத்திரமன்றி பந்து எறிவதிலும் பிடிப்பதிலும் மிகவும் திறமை வாய்ந்தவராக விளங்கினர். இவர் இம்முறை மொத்தமாக 26 விக்கட்டுகளை 389 ஓட்ட நஷ்டத்துக்கு பெற்றுள்ளார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 10-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 இஸ்லாமியசுற்சிந்தனை, 7-15 தோத்திரப்பாடல்கள் — நாகபூஷணி இரத்தினம், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-35 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு — கே. கே. கிருஷ்ண பிள்ளை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 கல்வி ஒலிபரப்பு, 2-45 வாணிலை அறிவிப்பு.

மாலை 5-15 கோட்டூர் கே. எஸ். சுவாமிநாதன் — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம்— சித்திரம், 7-45 எம். எம். தண்டபாணிதேசிகர் — பாட்டு, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பல கணி, 10-00 திரைப்பட இசை.





இப்போது சுகம்,பெலன்,சந்தோஷம் இவற்றையும் அளியுங்கள்

சின்னஞ் சிறு சிசு தனக்கு வேண்டிய சக்தியை பிறக்கு முன்பே தன் தாயிடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

ஆனால் வளரும்பேரதோ அந்த சிறு உடம்பின் வளர்ச்சிக்கு அநேக விட்டமின் சத்துகள் தேவைபடுகின்றன. சுக வளர்ச்சிக்கும், சிறந்த கண்பார்வைக்கும் விட்டமின் A, உறுதியான எலும்புகளுக்கும், பற்களுக்கும் விட்டமின் D, திடமான உடம்பிற்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C தேவைப்படுகின்றன.

**இவ்விட்டமின்கள் அனைத்தையும் உங்கள் குழந்தை பெறுகிறது என்று நீங்கள் எப்படி நிச்சயிக்ககூடும்?**

மீன் எண்ணெயும், தோடம்பழச்சாறும் இவ்விட்டமின் சத்துகள் அடங்கியவைதான். ஆனால் மீன் எண்ணெயின் பிசுபிசு தன்மையின் காரணமாக குழந்தைகளுக்கு அதை ஊட்டுவது எளிதல்ல. மேலும் சில வேளைகளில் மீன் வாடை கொண்ட ஏப்பம் வரக்கூடுமானதால் அநேக குழந்தைகள் இதை உட்கொள்ள விரும்பமாட்டார்கள். ஹலிபோரேஞ் உட்கொள்வதில் இச்சச்சரவுகள் ஏற்படுவதில்லை. குழந்தையின் சுக வளர்ச்சிக்கு வேண்டிய A, D, C விட்டமின் சத்துகள் அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. அது ருசி மிக்கது. (சாதாரண தோடம்பழத்தை விட இனிப்பானது.) மீன் வாடை அல்லது மீன் சுவை அதில் இல்லை. சிசுகளும், சிறு குழந்தைகளும் ஹலிபோரேஞ்சை அதிகம் விரும்புகிறார்கள்.

இளம் பிராயத்தின் ஆரோக்கியத்திற்கு

**ஹலிபோரேஞ்**

இதுவே சக்தி மிகுந்த வளர்ச்சிக்கு ஏற்றது



இதோ
கிளாக்ஸோ
அலன்பரிஸ்
உற்பத்தி.


## அறிவித்தல்

நீர்வேலிக் கந்தசுவாமி கோயில் திருப்பணி நிதிக்காக 13-4-64 ல் உருட்டப்பட இருந்த லொத்தர் அதிர்ஷ்டம் பார்ப்பது, அடிக்கட்டைகள் வந்துசேராமையாலும் திருவிழாவை முன்னிட்டும்பிற்போடப்பட்டுள்ளது.

திருவிழா முடிந்ததும் திகதி பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

ஞா. சின்னத்துரை,
312 காரியதரிசி.

## அறிவிப்பு

புங்குடுதீவு கிராமச்சபைத் தேர்தலில் 12ம் வட்டாரத்தில் போட்டியிட முன்வந்த தோமஸ் அந்தோனி பிள்ளை ஆகிய நான் இவ்வட்டாரத்தில் போட்டியிடும் திரு. ப. கதிரவேலு (வழக்கறிஞர்) அவர்களுக்காக போட்டியிலிருந்து விலகிக்கொள்கின்றேன் என்பதை வாக்காளப் பெருமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இங்ஙனம்
தோ. அந்தோனிப்பிள்ளை
311

## அறிவித்தல்

சீரணி நாகேஸ்வரி தேவஸ்தான வருஷாந்த மகோற்சவம் குரோதி வருஷம் சித்திரை மாதம் 5-ம் திகதி சரியான (17-5-64) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இத்தினத்தையிட்டு வீதிகளில் யாராவது கடைபோட விரும்பினால் தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் சபைக் காரியதரிசி திரு. ச. குமரையாவுடன் கலந்து பேசி முன் அனுமதிபெறல் வேண்டும். 315

## அறிவித்தல்

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சேமநலக் குழு (Welfare Board) இரண்டு பழைய மாணவரை மேற்படி சங்கக் குழுவின் அங்கத்தவராகத் தெரிவதற்காகச் சனிக்கிழமை (11-4-64) பிற்பகல் 4 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் மேற்படி சங்கம் கூடும். அத்தருணம் மேற்படி கல்லூரிப் பழைய மாணவரை சமூகம் கொடுக்குமாறு அன்பாக அழைக்கின்றேன்.

ச. செல்வத்துரை
313 அதிபர்

## ரூ 10,000 . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞகம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையெழுத்திட வேண்டும். 2-ம் எதிரியாகிய சின்னத்தம்பிபசுபதி,வவனியாபொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சென்று கையெழுத்திடவேண்டும். இவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால், பிணை ரத்து செய்யப்படுவதோடு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

இவ்வழக்கு இம்மாதம் 15-ந் திகதிசெவ்வாய்க்கிழமைவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. ஆனால் இவ்வழக்கு விசாரணை செய்ய இருவாரங்கள் பிடிக்குமென கருதியபடியாலும் இவ்வழக்கில் அதிகமான சாட்சிகளிருக்கிறபடியாலும், இப்பருவகால விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நேரம் போகாததால் அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்திப் போடப்பட்டது.

1-ம் எதிரி மூத்தர் வேலுப்பிள்ளைக்காக, அரசாங்கத்தால் திரு. எஸ். அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார். 2-ம் எதிரி சின்னத்தம்பி பசுபதி சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். 3-ம் எதிரியும் காலஞ்சென்ற காசிலிங்கசர்மாவின மனைவியுமான கோகிலாம்பாள் சார்பில் ஆஜராவதற்கு அரசாங்கத்தால் திரு. ரி, எஸ். ஆனந்தகுமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டீ. சில்வா ஆஜரானர்.

## வரி விளம்பரம்

### செல்லம்ஸ்

புகைப்படத் தாபனத்தில் இப்பொழுது திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதனால் ஸ்டூடியோவில் படங்கள் பிடிக்கும் வேலை மாத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மற்றும் பிற இடங்களுக்குச் சென்று படம்பிடிக்கும் (out door) வேலைகள், டெவலப்பிங்,பிரிண்டிங், முதலிய வேலைகள், செய்வித்துக் கொள்ளலாம் புது வருடதினத்திலிருந்து மீண்டும் சகல வேலைகளும் ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். 221

### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### IMPORTANT ANNOUNCEMENT
### SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences. ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212

### SALES

Bull Terrier X Alsatian Female Pups—8 Weeks—Weaned and Wormed-Apply: Rajasundram, Chulipuram. 226

### வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவிலுள்ள 32-ம் இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விலாசம்: க. திருநாவுக்கரசு, 42/4, நீராவியடி,யாழ்ப்பாணம். 214

### காணி விற்பனைக்கு

வைமன் வீதியில் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. N. ஆறுமுகம், 30, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 224

### விற்பனைக்கு

திறம் அல்சேஷன் நாய்க்குட்டிகள், 6 கிழமை. வாங்க விரும்புவோர் மாலை 2 மணிக்குமேல் கீழ்க்காணும் விலாசத்தில் விசாரிக்கவும். ஆண்ரூபா 125/- பெண் ரூபா 100/-. இ. ஜெ. செல்லையா, ஞான இல்லம், சோமசுந்தரம் அவன்யு, சுண்டிக்குளி. 225

சீன-இந்திய எல்லைத்தகராறு

# ஸ்ரீமாவின் யோசனைக்கு இந்தியா இணங்கவில்லை?

புதுடில்லி, ஏப். 9

லடாக்கிலுள்ள ஏழு நிலைகளிலிருந்தும் சீனா விலகிக்கொண்டால் எல்லைத்தகராறு குறித்து பேச்சுக்கள் நடத்த இந்தியா முன்வருமா என்று இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருந்த யோசனைக்கு புதுடில்லி இணங்கவில்லையென அறிவித்திருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கொழும்பு யோசனைகளை சீனா முழுவதுமாக ஏற்றுக்கொண்டாலன்றி சீனாவுடன் பேச்சுக்கள் நடத்தமுடியாதென்று இந்தியா உறுதியாகத் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமருக்கு இலங்கைப் பிரதமர் அனுப்பிய கடிதம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் கருத்து தெரிவிக்கையில் கொழும்பு யோசனைகளை சீனா முழுவதுமாக ஏற்றுக்கொண்டால்தான் எந்தவிதப் பேச்சுக்களுக்கும் இந்தியா இணங்குமென்றும் கொழும்பு யோசனைகளை சீனா ஏற்றுக்கொள்ளாதவரை பேச்சுக்கள் எதுவும் நடைபெற வாய்ப்பில்லை யென்றும் கூறினார்.

பிரதமர் நேருவுக்கு இலங்கைப் பிரதமர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு நிலைகளின் பெயர்கள் வருமாறு: ஷென் சென்வியன், ரீல் வென்ரியன், ஹொற்ஸ்பிறிங்ஸ், கொங்காபாஸ், யாசுபாஸ், கேர்நாக் போரே, ஸ்பங்கேர்.

# ஆசிரியர்களுக்கு 'எக்ஸ்ரே' பரிசோதனை

## மூன்றுவருடங்களுக்கொருமுறை நடத்த கல்விப்பகுதி தீர்மானம்

கொழும்பு, வியாழன்

ஆசிரியர்கள், மூன்று வருடங்களுக்கொருமுறை மார்பக எக்ஸ்ரே பரிசோதனை செய்ய வேண்டுமென்று கல்விப்பகுதி தீர்மானித்துள்ளது.

மாணவர்களின் நலனுக்காகவும் தங்களின் நலனுக்காகவும் ஆசிரியர்கள், மார்பக எக்ஸ்ரே பரிசோதனை செய்ய வேண்டும் என கல்விப் பகுதி அறிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மார்பக எக்ஸ்ரே பரிசோதனை செய்வது, க்ஷயரோகத் தடைக்கான தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும் கல்விப் பகுதி அறிவித்துள்ளது.

ஆசிரியர் பதவிக்கு இனிமேல் தெரிவு செய்யப்பட்டவர்கள் "எக்ஸ்ரே" பரிசோதனை செய்யவேண்டும். இந்தப் பரிசோதனையின் விளைவுகளைத் தொடர்ந்துதான் ஆசிரியர்களுக்குரிய சம்பள, பதவி உயர்வுகள் அளிக்கப்படுமென்றும் கல்விப்பகுதி அறிவித்துள்ளது.

---

## ஆசிய-ஆபிரிக்க ஆயத்த மகாநாடு

ஜாகர்த்தா, ஏப். 9

இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டம் நாளை ஜாகர்த்தாவில் ஆரம்பமாகும்.

இலங்கை கோஷ்டிக்கு இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. ஷேர்லி அமரசிங்கா தலைமை தாங்குகிறார்.

---

## ஒட்டுசுட்டான் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒட்டுசுட்டான் கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் நேற்றுக்காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஒட்டுசுட்டானைச் சேர்ந்த திரு. மகாலிங்கமும் ஒட்டுசுட்டான் உபதபாலதிகாரியாலய அதிபர் திரு. சி. சிவஞானசுந்தரமும சாட்சியம் அளித்தனர்.

வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் உபதபாலதிகாரியாலய அதிபர் திரு. சி. சிவஞானசுந்தரத்தை இன்று தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்வார்.

## எதிரிகள் விடுதலை

### காரைநகர் கொலை வழக்கில் தீர்ப்பு

ஊர்காவற்றுறை, வியாழன்

காரைநகர் கொலை வழக்கில் இன்று எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

காரைநகர் வாசியும், சரவணைக் கிராமத்தைச் சேர்ந்தவருமான ஐயம்பிள்ளை கந்தையாவை கொலை செய்ததாக காரைநகர் வாசி வி. பரமசாமி மீதும் கொலை செய்யச் சதி செய்ததாக இறந்தவரின் மனைவி பராசக்திமீதும் குற்றஞ் சாட்டி இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரணை செய்த திரு. அரசுவால்டன் இன்று எதிரிகளிருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் தரப்பில் திரு. வி. என். நாதன், ஆர். விசுவநாதன், எஸ். வி. கதிரவேலு ஆகியோரும் பொலிஸ் தரப்பில் திரு. பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கமும் ஆஜரானர்.

---

## தீயிட்டுத் தற்கொலை

### வயோதிபமாதின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கைம்பெண் செல்லக்கண்டு என்ற 65 வயதுடைய வயோதிபப் பெண் நீண்டகாலம் நோயுற்றிருந்த காரணத்தால் தம் உடல் மீது மண்ணெய் ஊற்றித் தாமே தீவைத்துத் தமது உயிரை மாய்த்தார்.

அயல் வீட்டில் வசிக்கும் திரு செல்வரத்தினம் சாட்சியமளிக்கும்போது, முனகல் சத்தம் கேட்டு தாம் அங்கு ஓடிப்போய்ப் பார்த்தபொழுது செல்லக்கண்டுவின் உடலில் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததாகவும் தீயை அணைக்கும் முயற்சியில் தண்ணீர் ஊற்றியும் உயிரைப் பாதுகாக்க முடியவில்லை யென்றும் கூறினர்.

செல்லக்கண்டுவின் மரணம் குறித்து விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

கிரிக்கெட் போட்டி

# சென். தோமஸ்-மத்தியகல்லூரி சமமாக முடிந்தது

## சிவபோதிநாதன் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்கள் எடுத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கொழும்பு சென். தோமஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டி எவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

முதலில் விளையாடிய மத்திய கல்லூரி கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்கள் எடுத்தது. சென். தோமஸ் தனது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் மத்தியகல்லூரி 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 136 ஓட்டங்களும், சென். தோமஸ் ஏழு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 112 ஓட்டங்களும் எடுத்தன.

மத்திய கல்லூரியையைச் சேர்ந்த வி. சிவபோதிநாதன் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்கள் எடுத்தது குறிப்பிடத்தக்கது. ஏ. பற்குணராசா 5 விக்கட்டுகளை வீழ்த்தி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த றெயிட், செனிவரத்ன, ராஜபக்ஸ ஆகியோர் திறமையாக விளையாடினர்.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த வீரர்களுன் முதலாவது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டவிபரம் வருமாறு:-

ஆர். சதானந்தன்: 01-18; டபிள்யூ. வின்ஸன்ட்: 11-00; எஸ். மேதர்: 15-21; ஏ. பற்குணராஜா: 04-17; வி. டி. மகாலிங்கம்: 19-00; வி. சிவபோதிநாதன்: 05-55; எம். வை. அரசரத்தினம்: 03-04; வி. அம்பலவாணர்: 15-10; தயானந்தன்: 07; நடராசா: 00; ராஜதுரை: 07.

சென். தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த வீரர்களின் முதலாவது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டவிபரம் வருமாறு:-

கே. பொரளேசா: 05-13; டி. எம். டி. சில்வா: 04-29; ஏ. பி. டி. தென்னக்கோன்: 07-20; எஸ். ராஜபக்ஷ: 00-03 எஸ். செனிவரத்ன: 09-04; எஸ். சேரசிங்க: 30 29; பி. எம். டபிள்யு. குணசேகரா: 00-01; வி. றெயிட்: 03-04; ஜி. பாலசிங்கம்: 01-10; எச் எஸ். எம். பீரிஸ்: 07; எஸ். செல்லையா: 00.

### இன்றைய போட்டி

சுன்னாகம் ஸ்கந்தவரோதய மைதானத்தில் சென். தோமஸ் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே இன்று கிரிகெட் போட்டி நடைபெறும்.

# தண்ணீர் கடனுக்குவட்டி மட்டும் ரூ. 21, 13, 533!

யாழ்ப்பாணம், வெள்ளி

1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ந் திகதி யாழ்ப்பாண மாநகரசபையில் இறுதியாக தீர்மானிக்கப்பட்ட யாழ்ப்பாணம் குடிதண்ணீர் திட்டத்தின் மொத்தச் செலவு 33,33,655 ரூபாவாகும். தண்ணீர் விநியோகம் பற்றிய திட்டத்தின் பிரேரணையை மாநகரசபையில் முதன் முதல் திரு. ஜே. எஸ். நிக்கலஸ் கொண்டுவந்தார். இப்பிரேரணையை முதலியார் சி. முத்துத்தம்பி அநுவதித்தார்.

இத்தண்ணீர் திட்டத்தை செயல்முறைக்கு கொண்டுவருவதற்காக முதன் முதலாக 1958-ம் ஆண்டு டிசம்பர் 8-ந் திகதி 20,00,000 ரூபா கடனுதவி கோரி விண்ணப்பிக்கப்பட்டது.

தண்ணீர் திட்டத்திற்கான மொத்தச் செலவில் மாநகரசபை, கடனாக மத்திய அரசாங்கத்திலிருந்து 21,47,355 ரூபா பெற்றுக் கொடுத்தது. அரசாங்கத் திடமிருந்து 11,86,300 ரூபா நன்கொடையாகக் கிடைத்தது.

முதலாவது கடனுதவியாகிய 10,000 ரூபா 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் திகதி கிடைத்தது. 2-வது கடனுதவியாக 40,00,000 ரூபா 60-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ந்திகதி கிடைத்தது. மூன்ருவது கடனுதவியாக 60,00,000 ரூபா 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி கிடைத்தது. 61-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் திகதி 20,00,000 ரூபா கடனுதவி கிடைத்தது. 61-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி 80,00,000 ரூபா கடனுதவி கிடைத்தது. இவ்வளவு கடனுதவிகளும் 4 வீத வட்டி செலுத்தப்படவேண்டும். 62-ம் ஆண்டு செப்டம்பர் 6-ம் திகதி கிடைத்த கடனுதவியான 137,355 ரூபாவிற்கு நாலரை வீத வட்டி கொடுக்கவேண்டும்.

தண்ணீர் திட்டத்திற்கு கடனாக தரப்பட்ட இப்பணம் வட்டியுடன் 40 வருடத்திற்குள் கொடுக்கப்படவேண்டும். கடனாகபெற்ற மொத்தப்பணத்தில் வருடாவருடம் 50250 ரூபா செலுத்தப்படவேண்டும். இதற்கான வட்டி வருடாவருடம் குறைவாக அளிக்கப்படவேண்டும். கடனாகபெற்ற தொகைக்கு மொத்தமாக 2,113,523 ரூபா வட்டியாக செலுத்தப்படவேண்டும்.

இத்தகவல்களை யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா தெரிவித்தார்.

## செய்தி தந்திகள் தமிழில் இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்ப் பத்திரிகைகளுக்கு தமிழில்செய்தித்தந்தி யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பக் கூடியதாக இருந்து வந்த சலுகை நேற்றுடன் ரத்தாக்கப்பட்டு விட்டது. நேற்று கொழும்பிலுள்ள ஒரு தமிழ் தினசரிக்கு அனுப்பக் கொபட்ட ஒரு செய்தித் தந்தியை யாழ்ப்பாண தபாற் கந்தோரில் ஏற்க மறுத்து விட்டனர்

ஆனல் யாழ்ப்பாணத்தில் ஆங்கில சிங்கள செய்தித் தந்திகள் அனுப்பக் கூடிய வசதிகள் உண்டு.

## வீடுகள் தீக்கிரையாகின

காங்கேசன்துறை, வியா.

வசாவிளான் சந்திக்கருகாமையில் உள்ள இரு வீடுகள் தீக்கிரையாகின. இதனுல் சுமார் 1500 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரு வீடுகளுக்கும் தீ மூட்டியதாக கருதப்படும் சந்தேக நபர்கள் மூவரை காங்கேசன் துறை பொலிசார் தேடி வருகிருர்கள். சந்தேக நபர்களான வேலன் நாகன், கணபதி நாகமுத்து ஆகியோரும் இனந்தெரியாத இன்னெரு நபரும் தலைமறைவாய் திரிகின்றனர்.

## எதிரிகள் விடுதலை செய்யபபட்டனர்

காங்கேசன் துறை, வியாழன்

சுழிபுரத்தைச் சேர்ந்த சபாபதி வைத்திலிங்கம் என்பவரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இருவரும் விசாரணை முடிவில் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 22-ந் திகதி சபாபதி வைத்திலிங்கத்தை சுழிபுரத்தைச் சேர்ந்த நடராசா சற்குணம், நடராசா பாலசிங்கம் ஆகியோர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. விசாரணை முடிவில் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாறு எதிரிகளை விடுதலை செய்தார்.

சங்கானைப் பொலிஸைச் சேர்ந்த திரு. ஹமீத்தின் உதவியோடு திரு. எஸ். அமிர்தலிங்கம் வழக்கை நடத்தினர். திரு. ஆர். செல்வரெத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் எதிரிகள் தரப்பில் ஆஜரானர்.

---

## நேருவைச் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துல்லாவை நேற்று பத்திரிகை நிருபர்கள் பேட்டிகண்டனர். இந்தப் பேட்டியில்தான் மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

"பிரதமர் நேரு எனது தோழர். நெருங்கிய நண்பர். அவரை நான் ஈத் பண்டிகைக்குப்பின்னர்தான் சந்திக்க முடியும்" என்றும் திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்தார்.

"பிரதமர் நேரு அனுப்பிய கடிதம் எனக்கு இம்மாதம் 7-ல் தான் கிடைத்தது ஸ்ரீநகர் செல்லமுன்னர் புதுடில்லிக்கு வரும்படி பிரதமர் கேட்டிருந்தார். ஆனல் அவரின் கடிதம் தாமதமாக எனக்குக் கிடைத்ததால், ஸ்ரீநகர் விஜயத்துக்கான திட்டத்தை ஏற்பாடுசெய்துவிட்டேன்" என்றும் அவர் கூறினர்.

காஷ்மீர் மக்களின் கௌரவத்துக்காக ஜம்மு மக்களும், ஜம்மு மக்களின் கௌரவத்துக்காக காஷ்மீர் மக்களும் தியாகம்செய்ய முடியாதென்றும் அவர் கூறினர். திரு. ஷேக் அப்துல்லா இன்று காஷ்மீர் பிரதமரான திரு. ஸாதிக்கைச் சந்தித்தார். "எனது பழையநண்பர் இவர்" என்று திரு. ஷேக் குறிப்பிட்டார்.

## நுவரெலியாவில் பிரதமர் ஓய்வு

கொழும்பு, வியாழன்

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இவ்வார இறுதியில் நுவரேலியாவுக்குச் சென்று சில தினங்கள் ஓய்வு பெறுவார். தமது பிள்ளைகளுடன் செல்லவிருக்கும் பிரதமர் இம்மாதம் 27-ந் திகதி கொழும்பு திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

**இலங்கைக் கலைக்கழகம் தமிழ் நாடகக் குழு**

நடத்தும்

1. பாடசாலைகளுக்கான நாடகப் போட்டி.
2. 1964-ம் ஆண்டின் சிறந்த நாடகத் தெரிவுக்கான போட்டி.
3. நாடகஎழுத்துப்போட்டி.

விபரங்களுக்கு 8-5-64 க்கு முன்னர்,

செயலாளர்,
இலங்கைக் கலைக்கழகம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு — 7.

309

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.